**வேலூர் மாவட்ட முதன்மை கல்வி அவர்களின் (பொ) செயல்முறைகள்**

ந.க. எண்.**3236/ஆ5/ 2025.** நாள்.04/07/2025

.....

பொருள் : பள்ளிக்கல்வி – அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் அடிப்படை ஆங்கில மொழித் திறன்களை மேம்படுத்தும் LEVEL UP திட்டத்தின் கீழ் மாதவாரியான மொழித்திறன் இலக்குகள் – ஜுலை மாதத்திற்கான திறன் வளர் செயல்பாடுகள் – அட்டவணை வெளியிடுதல் – தொடார்பாக

பார்வை : சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.040626/கே/இ3/2025, நாள். 02.07.2025

.....

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க, அரசுப் பள்ளிகளில் 6 முதல் 8ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களின், ஆங்கில மொழியில் வாசித்தல், பேசுதல் மற்றும் எழுதுதல் ஆகிய அடிப்படைத் திறன்களை முறையாக மேம்படுத்துவதற்கான LEVEL UP என்ற தன்னார்வத் திட்டத்தினை அறிமுகம் செய்து, தொடர் செயல்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, மாணவர்களின் அடிப்படை மொழித்திறன்கள் மேம்படுவதற்கான மாதவாரியான இலக்குகள் மற்றும் செயல்பாடுகள் முறையாக நிர்ணயிக்கப்பட்டு அவை தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளன.

அவ்வகையில் ஜுன் மாதத்திற்கான மொழித்திறன் இலக்குகள் மற்றும் செயல்பாடுகள் கொண்ட அட்டவணை வெளியிடப்பட்டு பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இச்செயல்பாடுகள் மற்றும் இலக்குகளின் அடைவை உறுதிபடுத்தும் வகையில் உரிய கால இடைவெளிகளில் பள்ளிகளில் ஆய்வு செய்யப்படும் எனத் தெரிவிக்கலாகிறது. இந்நிலையில், ஜுன் மாதத்தின் செயல்பாடுகளைத் தொடர்ந்து ஜுலை மாதத்தின் நான்கு வாரங்களுக்கான அடிப்படை ஆங்கில மொழித் திறன்வளர் இலக்குகள் மற்றும் கற்றல் செயல்பாடுகள் தற்போது வெளியிடப்படுகிறது.

2025–2026ஆம் கல்வியாண்டில் அரசுப் பள்ளி மாணவர்கள் ஜுன் 2025 முதல் டிசம்பர் 2025 வரையுள்ள ஏழு மாதங்களில் ஆங்கில மொழியில் நான்கு அடிப்படைத் திறன்களை எளிதாக அடையும் வகையில் பல்வேறு செயல்பாடுகள் இலக்குகளாக நிர்ணயிக்கப்பட்டு, ஒவ்வொரு மாதமும் மூன்றாம் அல்லது நான்காம் வாரத்தில் அடுத்து வரும் மாத்திற்கான மொழித்திறன் இலக்குகள் கொண்ட அட்டவணை வெளியிடப்படும் எனத் தெரிவிக்கலாகிறது. மாணவர்களின் அடிப்படைத் திளன்களின் முன்னேற்றத்தை குறிக்கோளாகக் கொண்டு, அனைத்து மாணவர்களும் செயல்பாடுகளில் பங்கு பெறுவதை ஒவ்வொரு தலைமையாசிரியரும் உறதி செய்ய வலியுறுத்தப்படுகிறது.

ஜூன் மாத மொழிவளர் திறன் அட்டவணை உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு அதன் இலக்குகள் அடையப்படுவதை உறுதி செய்வதோடு, முழுமையான அடிப்படை மொழித்திறன் அடைவிற்காக குறிப்பாக 6 முதல் 8ஆம் வகுப்பு வரையிலான மாணவர்கள் மேற்கொள்ளக் கூடிய மற்ற கற்றல் செயற்பாடுகளுடன் இணைந்து, பள்ளிக் கல்வித் துறையால் ஒவ்வொரு மாதமும் வெளியிடப்படும் அட்டவணைக்கேற்ப அடிப்படை ஆங்கில மொழி வளர் செயல்பாடுகளை ஆங்கில மொழி கற்பிக்கும் ஆசியர்கள் மேற்கொள்வதை ஊக்குவித்து அனைத்து மாணவர்களும் அடிப்படை மொழித் திறன்களை பெற உரிய வழிகாட்டுதல்கள் வழங்கி நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து அரசு பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இத்திட்டம் சார்ந்து ஆசியர்களின் கற்பித்தல் நுட்பங்கள் மற்றும் மொழித் திறன் வளங்களைக் கொண்ட வலைத்தளம் https://sites.google.com/view/tnlevelup ஆசியர்களின் பயன்பாடிற்காக உருவாக்கப்பட்டு ஒவ்வொரு மாதத்திற்கும் நான்கு வாரங்களுக்கான மொழித்திறன் இலக்குகள் அவ்வலைப்பக்கத்தில் பதிவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் செயல்பாடுகள் மூலம் மாணவர்கள் பெற்ற அடிப்படை ஆங்கில மொழித் திறன் அடைவு குறித்து, உரிய கால இடைவெளிகளில் மீளாய்வுகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பார்வையின் கடித நகல்

//ஒப்பம்//
முதன்மை கல்வி அலவலர்(பொ),
வேலூர்.

பெறுநர்:
தலைமையாசிரியர்கள்,
அனைத்து அரசு பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.
நகல்–

1. மாவட்ட சுகாதார அலுவலர்,
   மாவட்ட சுகாதார அலுவலகம்,
   வேலூர் மாவட்டம்.
2. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலை / தொடக்கக் கல்வி) வேலூர் மாவட்டம்.